**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:– திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24–ம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் மாசி 12–ம் நாள்**

**இடை நிலை மனு எண்.04/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.176/2024**

மாதையன் ... மனுதாரர் / 1–ம் பிரதிவாதி

**//எதிர்//**

ஜானகி

....எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. மூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. சந்திரசேகரன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 9 விதி 7 பிரிவு 151 –ன் படி இம்மனு தாக்கல்.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

மேற்படி வழக்கினை வாதி மனுதாரருக்கு எதிராகவும், இதர பிரதிவாதிகளுக்கு எதிராகவும் பாகம் கோரியும், நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவும், மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல்

செய்யவும் கடந்த 10.06.2025–ம் தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி வாய்தா தேதிக்கு முன்பிருந்தே மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் வந்ததால் மனுதாரரால் மேற்படி வாய்தா தேதியில் மனுதாரரை இந்நீதிமன்றத்தில் அழைத்த போது மனுதாரர் ஆஜராகவில்லை என்பதால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்ட ஒன்றல்ல. மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேற்படி வழக்கில் வெற்றி வாய்ப்பு மனுதாரருக்கு பிரகாசமாக உள்ளது. எனவே மேற்படி வழக்கில் கடந்த 10.06.2025–ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பித்துள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று இம்மனு தாக்கல்.

**3. எதிர்மனுதாரர்களின் எதிர் உரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். புதிய வழக்கினை உருவாக்கும் பொருட்டும், இந்த மனுவினை காலதாமதமாக தாக்கல் செய்து நீதிமன்றத்தினை தவறாக பயன்படுத்த மனுதாரர் / 1–ம் பிரதிவாதி முயன்று வருவதால் இம்மனுவினை தள்ளுடி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்நீதிமன்ற நேரத்தினை வீணாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே எதிர்மனுதாரர் / வாதியை துன்புறுத்த வேண்டும் என்பதற்காக இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரரின் மனு எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

3. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4. இம்மனுவின் தீர்மானிக்க கூடிய பிரச்சனை யாதெனில் – மேற்படி மனு அனுமதிக்க கூடியதாஎன்பதே ஆகும் ?

**5.தீர்வு:–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவும், மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவும் கடந்த 10.06.2025–ம் தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி வாய்தா தேதிக்கு முன்பிருந்தே மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் வந்ததால் மனுதாரரால் மேற்படி வாய்தா தேதியில் மனுதாரரை இந்நீதிமன்றத்தில் அழைத்த போது மனுதாரர் ஆஜராகவில்லை என்பதால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றும், மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்ட ஒன்றல்ல என்றும், மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டியது அவசியமாகிறது என்றும், மேற்படி வழக்கில் வெற்றி வாய்ப்பு மனுதாரருக்கு பிரகாசமாக உள்ளது என்றும் எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் புதிய வழக்கினை உருவாக்கும் பொருட்டும், இந்த மனுவினை காலதாமதமாக தாக்கல் செய்து நீதிமன்றத்தினை தவறாக பயன்படுத்த மனுதாரர் / 1–ம் பிரதிவாதி முயன்று வருவதால் இம்மனுவினை தள்ளுடி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், இந்நீதிமன்ற நேரத்தினை வீணாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் எடுத்துரைத்தார்.

இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலிக்கையில் மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கில் இந்நீதிமன்றத்தில் 10.06.2025–ம் தேதியில் ஆஜராவதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது, மேற்படி வாய்தா தேதிக்கு முன்பிருந்தே மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் வந்ததால் மனுதாரரால் மேற்படி வாய்தா தேதியில் மனுதாரரை இந்நீதிமன்றத்தில் அழைத்த போது மனுதாரர்

ஆஜராகவில்லை என எடுத்துரைத்திருப்பதை கருத்தில் கொண்டும், இருதரப்பிலும் எடுத்துரைக்கும் வாதுரைகளையும், சாட்சிகளையும் பரிசீலித்து தீர்ப்பு பிறப்பித்தால் தான் அது தகுதி வாழ்ந்ததாகவும் அறுதியானதாகவும் இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதாலும், மனுதாரருக்கு அவரது தரப்பு எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் இந்நீதிமன்றம் கருதுவதாலும், மேலும் பல வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காகவும் இம்மனுவை எதிர்மனுதாரின் செலவுத்தொகையுடன் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் எனில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.1000/–யை 06.03.2026–க்குள் செலுத்த வேண்டும், தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க. 06.03.2026

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (24.02.2026) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

<u>1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை .

<u>2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.